விலை ரூபா 3-00

University of Jaffna Sri Lanka RECEIVED 1990 Library

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஆனி: 18 துல் ஹஸ்தா: பிறை: 8 இதழ்: 133
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 02-07-1990

## "மீண்டும் பேச்சுக்கள் நடத்தி பிரச்சனைகளுக்கு தீர்வுகாண விரும்புகிறோம்" - ஜனாதிபதி

(கொழும்பு)

"மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனைகளுக்கு நல்லதொரு தீர்வுகாண நாங்கள் தயராக இருக்கிறோம்" என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற பொதுவைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

திரு. பிரேமதாஸா மேலும் அங்கு பேசுகையில் கூறியாவது; "இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயுதம் ஏந்திய யுத்தம் நடைபெறுகிறது. இந்த யுத்தத்தின் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியும் என்று நான் நம்பவில்லை. பேச்சுவார்த்தைகளை நடத்தி

(4ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமருக்கு ஜனாதிபதியின் செய்தி

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கிற்கு, ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் விசேட செய்தி ஒன்றை இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. பேர்னுட்

(4ம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதற்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கம் முயற்சி!

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவரும் அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுவருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளையும் அரசாங்க உயர்மட்டத் தலைவர்களையும் தனித்தனியாக செஞ்சிலுவைச்சங்கத்தின் பிரதிநிதிகள் அண்மையில் சந்தித்து இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

இச் சந்திப்புக்களின் போது வடக்கு கிழக்கு நிலைபற்றி இரு பகுதியினருடனும் விரிவாக ஆராயப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இரு உயர் அதிகாரிகள் மீண்டும் அரச உயர் தலைவர்களிடம் நிலைமைகளை விளக்குவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து அவசரமாக கொழும்பு சென்றுள்ளனர்.

## இன்று சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. பேர்னுட் திலகரத்தின இன்று இந்திய வெளிவ்வகார அமைச்சரை சந்தித்து வடக்கு-கிழக்கு நிலைமை பற்றி விளக்குவார்

## 'புலிகள்மீதான யுத்தம் தமிழர்மீதான யுத்தமே! - பாலகுமார்

(யாழ்ப்பாணம்)

'தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தம் என்பது முழுத் தமிழ் பேசும் மக்கள் மீதும் தொடுக்கப்பட்ட யுத்தமாகும்.''

ஈழவர் ஜனநாயக முன்னணியின் (ஈரோஸ்) பொதுச்செயலாளர் திரு. வே. பாலகுமார் ஜனதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ் பேசும் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள சகல அடக்குமுறைகளும்உடன் நிறுத்தப்படாவிட்டால் இது வரைகாலமும் சிங்கள அரசில் தலைமைத்துவங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு இழைத்த நம்பிக்கைத் துரோகத்தையே ஜனதிபதி பிரேமதாசாவும் இழைத்தவர் ஆவார் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

## யாழ். மாவட்டத்தில் புதிய அகதி முகாம்கள் அமைப்பதற்கு ஏற்பாடு

### யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாவட்டத்தில் தற்போது 230 அகதிகள் முகாம்கள் இருக்கின்றன. இவற்றில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாகத் தஞ்சம்புகுந்துள்ளன.''

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்; "மட்டுநகர், திருமலை, கொழும்பு போன்ற இடங்களிலிருந்து ஐயாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்போது இம்முகாம்களில் அகதிகளாக இருக்கின்றுர்கள். இவர்களுக்கு வேண்டிய அத்தியாவசிய உணவு வகைகளை நாம் பெரும்பாலும் வழங்கியுள்ளோம்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து, அகதிகளாக இடம்பெயர்ந்து முகாம்களில் தஞ்சம்புகுந்துள்ள 80 வீதமான மக்களுக்கும் நாம் இவ் உணவுவகைகளை வழங்கிவருகின்றோம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலை அகதிகள் 540 குடும்பங்கள் யாழ். நகரில் தஞ்சம்!

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்திலிருந்து 540 குடும்பங்கள் அகதிகளாக நேற்று முன் தினம் மாலை யாழ். நகர் வந்துள்ளனர்.

கடந்த 15 நாட்களாக தாம் பெரும் கஷ்டங்களை அனுபவித்து, கால்நடையாக காடுகளூடாக, உணவின்றி யாழ். நகரை வந்தடைந்ததாக மேற்படி அகதிகள் தெரிவித்தனர்.

இவர்களில் பெரும்பாலானேர், யாழ். நகரிலுள்ள பல்வேறு அகதிகள் முகாம்களிலும்தற்போது தங்கியுள்ளனர். (வி)

## மட்டக்களப்பு அம்பாறையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட வயோதிபர், சிறுவர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில், ஊரடங்கு உத்தரவு பிறப்பித்த அரசபடையினர் நகரைச்சுற்றிவளைத்து அங்கிருந்த வயோதிபர், குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கானேரை கைது செய்துள்ளனர்.

பாதுகாப்புப்படையினர் வீடுவீடாக சோதனையில் ஈடுபட்டுவருகின்றனர்.

அம்பாறைப் பகுதியிலும் நடந்த சோதனையில் ஆயிரத்திற்கும் அதிகமானேர் சந்தே

(4-ம் பக்கம் பார்க்க)

## பூனைவையில் வைத்து கற்களினல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி ஐந்து பஸ்களில் வந்து கொண்டிருந்த தமிழ் பயணிகள் மீது பூனைவையில் வைத்து இராணுவச் சிப்பாய் ஒருவர் கல்லெறிந்து தாக்குதல் நடத்தினர்.

கடந்த வியாழக்கிழமை

(4ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, பரந்தன், திருநகரில் பொம்மர், ஹெலி தாக்குதல்; மூவர் பலி, பலர் காயம்

### வீடுகள், கடைகள் பலத்த சேதம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, பரந்தன், திருநகர் போன்ற இடங்களில் நேற்று முன்தினம் பொம்பர், ஹெலி தாக்குதல்கள் நடைபெற்றதில் உயிர் சேதங்களும், பொருட்சேதங்களும் பெருமளவில் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட பொம்பர் தாக்குதல்களில் பல கடைகளும், வீடுகளும் சேதமடைந்தன. இப் பகுதியில் உள்ள கடையொன்றின்மேல் குண்டு விழுந்து வெடித்ததில் அக்கடையின் உரிமையாளர் ஸ்தலத்திலேயே மரணமானர்.

பரந்தன் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட பொம்பர் தாக்குதல்களில் அப்பகுதியில் உள்ள உணவுக்களஞ்சியம் ஒன்று பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளதாகக்கூறப்படுகின்றது.

திருநகர் பகுதியில் பொது மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில், ஹெலி சுட்டதில் இருவர் மரணமடைந்தனர், பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்தனர், பல வீடுகளும் சேதமடைந்துள்ளன. (வி)

## கொழும்பு அகதி முகாம்களில் இரண்டாயிரம் தமிழர்கள்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபம், ஜிந்துப்பிட்டி முருகன் கோயில் ஆகிய இடங்களில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கான உணவுப் பொருள்களை சர்வோதயம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பொதுநிறுவனங்கள் வழங்கிவருகின்றன.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மனனர், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களிலிருந்து கொழும்பு சென்றவர்களே இந்த அகதிமுகாம்களிலிருப்பதாத் தெரிவிக்கப் படுகிறது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. மேற்கில் 2,000 குடும்பம் தஞ்சம்; உணவு வழங்க ஏற்பாடு

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராம சேவை அலுவலர் பிரிவிலும் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, மன்னார், காரைநகர், தெல்லிப்பளை ஆகய பல்வேறு இடங்களிலும் இருந்து அகதிகளாக உறவினர் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும், பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் ஒரு வாரத்துக்கான இலவச உணவு விநியோக ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

அகதிகளான சகல குடும்பங்களுக்கும் ஒரு வாரத்துக்கான இலவச உணவு விநியோக அனுமதிப்பத்திரம் கிராம சேவை அலுவலர்களினல் இன்று விநியோகிக்கப்படவுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள ப. நோ. கூ. சங்கங்களில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்துக்கு ரூபா 55ம் இரண்டு அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்துக்கு ரூபா 85ம் மூன்று அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்துக்கு ரூபா 105ம் நான்கு அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்துக்கு ரூபா 125ம் ஐந்து அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்துக்கு ரூபா 155ம் ஆறு அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்துக்கு ரூபா 170ம் ஏழு குடும்ப அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்துக்கு ரூபா 185ம் எட்டும் எட்டுக்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தவரைக் கொண்டகுடும்பத்துக்கு ரூபா 200ம் பெறுமதியான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை அளவெட்டி, தெல்லிப்பளை, மாவிட்டபுரம், காரைநகர், யாழ்ப்பாணம் ஆகிய பல்வேறு இடங்களிலுமிருந்து பெரும் தொகையானோர் நாள்தோறும் வலிகாமம் மேற்குப்பிரிவுக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது நான்கு அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மூளாய், சுளிபுரம், சங்கானை, அராலி ஆகியஇடங்களிலேயே தற்போது அகதி முகாம்கள் அவ் அவ்பகுதி மக்களினல் ஏற்படுத்தப்பட்டு நடாத்தப்படுகின்றது.

இந்த முகாம்களை நடாத்துகின்ற அமைப்புக்கள் பொது மக்களிடமிருந்தும் பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் உதவிகளை எதிர்பார்க்கின்றனர். (137)

# கல்வி நிர்வாக சேவைக்கு 19 தமிழ் அதிகாரிகளை நியமிக்க உறுதி

(கொழும்பு)

இன விகிதாசார அடிப்படையில் கல்வி நிர்வாக சேவைக்கு மேலும் 19 தமிழ் அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்ள உயர் கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி உறுதிவழங்கியுள்ளார்.

இதேவேளை கல்வி நிர்வாக சேவைக்கு 132 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் எட்டுத் தமிழரும் ஆறு முஸ்லிம்களும் அடங்குகிருர்கள். (து)

# வடக்கு-கிழக்கு நிலை: தமிழ்க் கட்சிகள் ஜனதிபதி சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து நிலவும் நெருக்கடிநிலை தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ், ஈ.என். டி. எல். எவ், ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் ஜனதிபதி ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

# நீர்கொழும்பு கடலோரப் பகுதியில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு கடலோரப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கடலோரமாக நீர்கொழும்பிற்கு வந்து விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெல்ல வீதி, குடாப்படுவ ஆகிய இடங்களில் ஆயுதம் தாங்கிய பொலிசார் தற்பொழுது சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர். (து)

# கூட்டுறவுச் சங்க லொறிகள் மீது ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருட்களை ஏற்றிவரச் சென்ற கூட்டுறவுச் சங்க லொறிகள் ஹெலித் தாக்குதலுக்குள்ளாகி பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம், தெல்லிப்பழை சுன்னகம், நல்லூர் ப. நோ. கூ. சங்க லொறிகள் உணவு களஞ்சியத்தில் இருக்கும் அரிசியை ஏற்றிவரச் சென்ற போதே இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவத்தின் போது யாழ். ப. நோ. கூ. சங்க லொறி பலத்த சேதத்திற்குள்ளானபோது சாரதியும், கிளினரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

# காரைநகர் அகதிகள் சங்கானையில் தஞ்சம்

(வட்டுக்கோட்டை)

ஷெல், பீரங்கித் தாக்குதல்களை அடுத்து காரைநகர், தெல்லிப்பழை, கட்டுவன், மயிலிட்டி ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறிய சுமார் 141 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சங்கானை நீதிமன்றம், சங்கானை கலாசார மண்டபம் சங்கானை பொலிஸ்நிலையம், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். சங்கானை நிகரை வைரவர் கோவில் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கான சகல வசதிகளையும் செய்துகொடுப்பதில் சங்கானை அகதிகள் புனர்வாழ்வு சங்கமும் சங்கானை பட்டின உப அலுவலகமும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

இந்த முகாம்களில் இருக்கும் 141 குடும்பங்களைச் சேர்ந்த 451 பேருக்கும் உணவு வகைகளை வழங்குவதற்கு பொது ஸ்தாபனங்கள் பல முன்வந்துள்ளன.

நீதிமன்றத்தில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேரும் கலாசார மண்டபத்தில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேரும் பழைய பொலிஸ் நிலைய மண்டபத்தில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேரும் சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 197 பேரும் நிகரை வைரவர் கோவிலில் 22குடும்பங்களைச் சேர்ந்த 80 பேருமாக மொத்தம் 451 பேருக்கும் பொறுப்பாக சங்கானை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இயங்கிவருகிறது. (139)

## அகதி முகாம்களில் சுகாதாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப்பகுதிகளில் அமைந்துள்ள அகதிமுகாம்களுக்கான சுகாதாரசேவைகளை யாழ் நகரப்பகுதி சுகாதார பகுதிகூயிர் வழங்கி வருகின்றனர்.

அகதிமுகாம் எதுக்கும் சுகாதார உதவி தேவைப்பட்டால் உடன் மாநகரசபையில் இயங்கும் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## தேசிய பாதுகாப்பு நிதி

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா அரசின் பாதுகாப்பு நிதியத்திற்கு இதுவரை மூன்றுகோடி ரூபா சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## அகதிகளுக்கு உதவுமாறு வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட சன சமூக நிலைய அங்கத்தவர்களை இயலும்வரை தங்கள் பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களில், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுடன் சேர்த்து தேவையான உதவிகளை செய்யுமாறு யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. டிகவலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாக வேறு உதவிகள் ஏதாவது தேவைபபடின் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## கடமைக்கு வருமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியத்திலுள்ள வைத்திய நிலையங்களில் கடமை புரியும் சுகாதார சேவையை சேர்ந்த சகல ஊழியர்களையும் உடனடியாக கடமைக்கு சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# யுத்தநிறுத்தம் மேற்கொள்ள பாலகுமார் ஜனதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் மோதல்களை நிறுத்தி யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ளுமாறு ஈழவர் ஜனநாயக முன்னணிப் பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமார் ஜனதிபதி ஆர். பிரேமதஸாவை கடிதம்மூலம் கோரியுள்ளார்.

தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் தொடர்ந்து நடைபெறும் விமானக்குண்டு தாக்குதல்களை நிறுத்தி உடனடியான யுத்த நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் திரு. பாலகுமார் அந்த கடிதத்தில் கேட்டுள்ளார்.

## தனியார் பஸ்கள் புறப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி தனியார் பஸ் எதுவும் நேற்றுப் புறப்படவில்லை. (153)

## சுட்டிபுரம் ரதோற்சவம்

(தென்மராட்சி)

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவில் ரதோற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

பாற்காவடி, செடிற்காவடி, மகளிர் பாற்செம்பு என்பன உற்சவத்தை சிறப்பித்தன.

## திருடர்கள் தொல்லை

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குழி பகுதியில் இரவு நேரங்களில் திருடர்கள் தொல்லை அதிகரித்து வருகின்றது.

பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதல்ளுக்கு அஞ்சி இரவு நேரங்களில் இப்பகுதிகளில் உள்ள கூடுதலான மக்கள் பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் தஞ்சம்புகுந்து வருகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திருடர் வீடுகளை உடைத்து பெறுமதியான பொருட்களை திருடுவதுடன், ஆடு, மாடு, கோழி போன்றனவும் பெருமளவில் களவாடபட்டுள்ளன,

இத்திருட்டுச் சம்பவங்கள் கூடுதலாக, ஈச்சமோட்டை 1-ம் ஒழுங்கை, பிளச்சர் ஒழுங்கை ஆகிய பகுதிகளில் நடைபெற்றுள்ளன. (வி)

# 4 அகதி முகாம்களில் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைப்பகுதியிலுள்ள பிரதான அகதிகள் முகாம்களான சென்பற்றிக்ஸ் கல்லூரி, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை செபமாலை மாதா கோயில், ஒஸ்மானிய கல்லூரி ஆகியவற்றில் நேற்று முதல் சுகாதார நிலையங்கள் யாழ். மாநகர சபையால் நிறுவப்பட்டுள்ளன

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் பொது சுகாதார பரிசோதகர்களின் உதவியுடன் இந்த சுகாதார நிலையங்கள் இயங்குகின்றன.

இந்தச் சுகாதார நிலையங்களினல் அகதிகள் முகாம்களின் சுத்திகரிப்பு வேலைகள், நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் கிருமிநாசினி தெளித்தல் மற்றும் அவசர முதலுதவிச் சிகிச்சைகள் குடிநீர் வசதிகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அகதி முகாம்களை ஆரம்பிப்பவர்கள் மேற்படி நான்கு சுகாதார நிலையத்துடனே அல்லது நல்லூர் மாநகரசபை அலுவலகத்தில் இயங்கும் விசேட கரும பீடத்துடனே தொடர்பு கொள்ளும்படி யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. [illegible] பாலசிங்கம் [illegible] விடுத்துள்ளார். (153)

# கொள்ளையிட வந்தவர்கள் கொலை செய்தனர்!

## சடலத்தை எரிக்கவும் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின், 2-ம் குறுக்குத் தெருவில் வீடொன்றில் தனியாக வசித்துவந்த பெர்ணண்டோ என்னும் வயோதிபர் குத்தி கொலைசெய்யப்பட்டுள்ளார்.

கொலையாளிகள், அவரின் உடலை [illegible] [illegible] காரணமாக கொலை செய்யப்பட்ட பெர்ணண்டோ தனிமையில் வாழ்ந்து வந்ததாகவும், இவரின் கொலையுண்ட செய்தியை கேள்வியுற்ற, உறவினர்கள் அவரின் வசிப்பிடத்துக்குச் சென்று பார்த்த போது, அவரின் உடலின் கால்பகுதி கருகிப்போய் இருப்பதை கண்டதாகவும் உறவினர் ஒருவர் தெரிவித்தார். (வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திரா காங்கிரஸ் கோரிக்கை

[சென்னை]

இலங்கைத் தமிழர்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் அளித்துள்ள இந்திய அரசு, தற்போதுள்ள பிரச்சனையில் தலையிட்டு இலங்கை அரசு தமிழர்கள்மீது தொடுத்துள்ள தாக்குதல்களை நிறுத்தவேண்டுமென்று தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் உயர் மட்டக்குழு மத்திய அரசிடம் கோரியுள்ளது.

## அகதிகள் அதிகரிப்பு

(சென்னை)

வடக்கு-கிழக்கிலிருந்து இராமேஸ்வரத்திற்கு தமிழ் அகதிகள் வருவது அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் மட்டும் 330 தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் வந்துள்ளதாக பொலிஸ் ஆணையாளர் திரு. துரை தெரிவித்துள்ளார்.

## சங்குப்பிட்டியில் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டி – கேரதீவு இறங்குதுறையில் நேற்றுமுன் தினம் பொம்மர் விமானங்களிலிருந்து குண்டுகள் வீசப்பட்டன.

பொதுமக்களை இலக்கு வைத்தே குண்டுகள் வீசப்பட்டன.

இக்குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை.

## கரவெட்டியில் 60 குடும்பங்கள் தஞ்சம்

[யாழ்ப்பாணம்]

வளலாய், பலாலி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த 60 குடும்பங்கள் கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலயத்தில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

கரவெட்டிப் பங்குத்தந்தை இந்த அகதிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவருகிறார்.

# யுத்த கால நிலைமையும் மாணவர் பங்களிப்பும்

ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தை பிரகடனம் செய்துள்ளது. அரச படைகளை எதிர்த்து போராடும் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை கைவிட்டுள்ளார்கள்.

யுத்தத்தில் போராளிகள் மட்டுமல்ல, பொதுமக்களும் பொம்பர், ஷெல், ஹெலி தாக்குதலுக்கு பலியாகி வருகிறார்கள்.

பொதுமக்கள் தங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

பசி, பட்டினி, பஞ்சம் பொதுமக்களை எதிர்நோக்கியுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளை செய்யவேண்டியது அவசியமாகும்.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்த மா கப்பல் திரும்பிவிட்டது. ரயில் லொறி போக்குவரத்து எதுவும் இல்லை.

கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்களும் கரைந்து வருகிறது.

### வர்த்தக நிலையங்கள்

முக்கிய நகரங்களான திருமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியான யுத்த நிலைமை காரணமாக வர்த்தக நிலையங்கள் திறக்கமுடியாத நிலைமைஏற்பட்டுள்ளது. சில நகரங்களில் வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாகியுள்ளன. மற்றும் சில இடங்களில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பொம்பர், ஹெலி, ஷெல் தாக்குதல் காரணமாக சில பகுதிகளில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வழக்கமான வியாபாரம் செய்யமுடியாத நிலைமை உள்ளது.

### பொருட்கள் இல்லை

யாழ். நகரைப் பொறுத்தவரை முன்கூட்டியே பல வர்த்தக நிலையங்களிலுள்ள பொருட்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு விட்டது. சில கடைகளில் பொருட்கள் யாவும் விற்பனையாகிவிட்டது. எஞ்சியிருந்த கடைகளிலுள்ள பொருட்களும், தாக்குதல்கள் இடம்பெறாத நேரங்களில் மொத்தமாக விற்பனை செய்யப்பட்டுவிட்டது. யாழ். நகரப்பகுதியில் எந்தக் கடையிலும் உணவுப் பொருட்கள் கிடையாது.

### சிறிய கடைகள்

நகரைச் சுற்றியுள்ள கல்வியங்காடு. நல்லூர், அரியாலை முத்திரைசந்திப் பகுதிகளிலே உள்ள சிறிய கடைகளிலும் உணவுப் பொருட்கள் துரிதமாக விற்பனையாகி முடியும் நிலைக்குவந்துவிட்டது, இரண்டொரு தினங்களில் அக்கடைகளும் பூட்டப்பட்டுவிடும்.

**-ஈழநாதன்-**

கூடிய விலை கொடுத்தும் உணவுப்பொருட்களை வாங்க முடியாத நிலைஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாணப் பகுதியில் இன்னும் வாழ்ந்துவரும் மக்களைப் பெரும் பஞ்சம் தாக்கவிருக்கிறது.

இதற்கு மாற்றுவழி என்ன என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்து செயல்படவேண்டியது அவசியமாகும்!

வடக்கில், நாவற்குழி, தொண்டமனாறு, இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுவிட்டது.

பலாலி, நயினாதீவு, ஆனையிறவு இராணுவ முகாம்கள் மற்றும் காரைநகர் கடற்படைப் பகுதியிலுள்ள மக்களில் பலர் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். பலாலி பகுதியில் பெரும்பாலான குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வடமராட்சி தென்மராட்சி பகுதிகளுக்கு அகதிகளாக சென்றுவிட்டனர். சாவகச்சேரியில் மட்டும் 800க்கு மேற்பட்ட குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ளன.

### கைகொடுத்த தென்மராட்சி

தென்மராட்சி பகுதிகளில் தேவையான உணவுப்பொருட்கள் உள்ளது. வடமராட்சி லிபரேஷன் ஒப்பரேஷன் காலத்தில், அப்பகுதி மக்களுக்கு கைகொடுத்து உதவியது தென்மராட்சிதான்.

தற்போதும் அதே தென்மராட்சிதான் அகதிகளை வரவேற்று வசதியளித்துவருகிறது.

இது ஒரு நீண்டகால யுத்தம். தமிழ் ஈழம் கிடைக்கும் வரை போராட்டம் ஓயாது. என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் யுத்த விமானங்கள், ஆயுதங்கள் வாங்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது. யுத்த நிதியும் சேர்த்து வருகிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இன்னும் ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் யுத்தம் முடிந்துவிடும் என்று கருத இடமில்லை. ஒரு நிரந்தரத் தீர்வு: தமிழினத்திற்கு நிர்ந்தர பாதுகாப்பு: கிடைக்கும்வரை யுத்தநிலைமை நீடிக்கப்போகின்றது. அதற்கேற்றவாறு மக்களும் செயல்படவேண்டும்.

### பதுங்கு குழிகள்

அண்மைக் காலத்தில் அமைதி நிலையில் வாழ்ந்து வந்த மக்கள் பாதுகாப்புக் கருதி பதுங்கு குழிகளை அமைக்கவில்லை. பொம்பர், ஹெலி, ஷெல் தாக்குதலுக்குப் பின்னர் தான் அவசரமவசரமாக. பகலிரவாகப் பதுங்கு குழிகளை அமைத்து வருகிறார்கள்.

வசதி படைத்தவர்கள் கூலி கொடுத்து பதுங்கு குழிகளை அமைக்கிறார்கள். குடிசைகளில் வாழும் ஏழைகள்: ஒரு நாள் உணவிற்கே வழியில்லாதவர்கள், திக்கற்றவர்கள், குழிகளை அமைக்கமுடியுமா? குழி வெட்ட அறுநூறு, எழுநூறு ரூபா. மரக்குத்திகள் வாங்க பலநூறு ரூபா: உரப்பை சாக்கின் விலையும் உயர்ந்துவிட்டன.

மாணவர்கள் ஒன்றுகச் சேர்ந்து, தங்கள் பகுதியில் உள்ள வசதியற்ற மக்களுக்குப் பதுங்கு குழி அமைப்பதில் தங்கள் தங்கள் பங்களிப்பைச் செய்ய முடியாதா?

மயிலிட்டியில் பகுதியில்முன்னர் ஒரு பொதுஸ்தாபனம் 1500 மலகூடங்கள் அமைத்துக் கொடுத்திருந்தது. மற்றும் பல பொது ஸ்தாபனங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்து கொடுத்திருக்கிறது. தற்போதுள்ள நிலையில் மக்களுக்குத் தேவையானது பதுங்குகுழிதான். பொது ஸ்தாபனங்கள் இந்த பதுங்கு குழிகளை அமைக்க முன்வருவார்ாளா?

### பாடசாலைகள் இயங்கவில்லை

வடக்கு கிழக்கில் பல இடங்களில் பாடசாலைகள் இயங்கவில்லை. பாடத்திட்டம் பூர்த்தியாகவில்லை. தனியார் கல்வி நிலையங்களும் மூடப்பட்டுவிட்டன. மாணவர்கள்பலர் தங்கள் பெற்றோருடன் இடம்பெயர்ந்து விட்டனர். பல பாடசாலைகள் அகதிகள் முகாமாக மாற்றப்பட்டுள்ளன. அரசபடையினரால் மாணவர்கள் கூட தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தநிலையில் பரீட்சைகள் உரியநேரத்தில் நடக்கும் என்பது நிச்சயமில்லை.

ஆதலால் மாணவர்கள் தங்கள் நேரத்தையும் காலத்தையும் மக்கள் சேவைக்கு பயன்படுத்த வேண்டியது அவசியம்.

படையினரின் தாக்குதலுக்குள்ளான மக்களை உடனுக்குடன் பாதுகாப்பான இடங்களுக்கோ ஆஸ்பத்திரிக்கோ மாணவர்கள் சைக்கிளில் எடுத்துச் செல்லலாம்.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வாங்குவதற்கு நீண்டநேரம் கியூவில் நிற்க முடியாமல் தவிக்கும் வயோதிபர்களுக்கு, தாய்மார்களுக்கு மாணவர்கள் அப்பொருட்களை கியூவில் நின்று வாங்கி கொடுத்து உதவிசெய்யலாம்.

கின்னஞ்சிறிசுகளுடன் அகதிகளாக வெளியேறும் குடும்பங்களை சைக்கிளில் பாதுகாப்பான இடங்களுக்கு ஏற்றிச் சென்று உதவலாம்.

மூட்டை முடிச்சு, தட்டு முட்டு சாமான்களுடன் யாழ் நகர் வந்து சேரும். திருமலை, வவுனியா அகதிகளை அவர்களின் உறவினர் இருப்பிடங்களுக்கு சைக்கிளில் ஏற்றிச் சென்று உதவலாம்.

தங்கள் பகுதிகளில் தேவையான மருந்து வகைகளை வாங்கி வைத்து காயமடைந்தவர்களுக்கு முதலுதவி அளித்து உதவலாம்.

யாழ், நகரில் பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டுள்ளது. தென்மராட்சி பகுதிக்கு சென்று உணவுபொருள்மெழுகுவர்த்தி தீப்பெட்டி வாங்கி வந்து கொடுத்து உதவலாம்.

தென்மராட்சி, பகுதியில் மருந்து விற்பனை நிலையங்கள் வழமைபோல் செயல்ப்படுகிறது. தேவையான மருந்துகளை வாங்கி வந்து கொடுத்து உதவலாம்.

ஒவ்வொரு வீடுகளிலும், பதுங்கு குழிகள், முதல் உதவி பெட்டிகள் இருக்கவேண்டிய

(4ம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்குச் சகல உதவிகளையும் துரிதப்படுத்துமாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## முத்திரைச்சந்தையில் தனியார் பஸ்நிலையம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு முன்பாக தற்காலிக இயங்கிவந்த தனியார் பஸ் நிலையம், பாதுகாப்புக் கருதி நேற்றுமுன்தினம் முதல் முத்திரைச் சந்தைக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. ஒட்டோக்கள் மற்றும் வாடகை கார்களும் அங்கு சென்றுள்ளன.

## ஏழாயிரம் அகதிகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்த ஏழாயிரத்து அறுநூறு அகதிகள் அனுராதபுரத்தில் தங்கியுள்ளனர். இவர்களுக்குரிய நிவாரணம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அனுராதபுரம், பொலநறுவா எல்லைக் கிராமங்களை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# காரைநகர் மக்கள் தினமும் இடம் பெயர்வு

(சித்தன்கேணி)

காரைநகரிலிருந்து பெருந்தொகையான மக்கள் தினமும் இடம்பெயர்ந்த வண்ணமிருக்கிறார்கள்.

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து தினம் தோறும் ஏவப்படும் பீரங்கி தாக்குதல்களினால் துறைமுகம், மடத்துவளவு, தோப்புக்காடு, ஊரி ஆகிய இடங்களிலுள்ள பொதுமக்கள் அனைவரும் வேறுஇடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

இப்பகுதிகளிலுள்ள பல வீடுகள், ஆலயங்கள், சேதமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (137)

# 600 பொலிஸார் காணமற்போயுள்ளனர்

--பொலிஸ் மா அதிபர்

(கொழும்பு)

அறுநூறு பொலிஸார் இதுவரையும் காணமல் போயுள்ளதாகவும். இவர்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரையும் கிடைக்கவில்லை என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# தாண்டிக்குளத்தில் 2 இராணுவத்தினர் பலி; 14 பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான நேரடி மோதலொன்றில் இரு இராணுவத்தினர் இறந்துள்ளதுடன் ஒரு அதிகாரி உட்பட 13 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாக அரசாங்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில்தெரிவிக்கப்பட்டுள்ளது:

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற மோதலிலே இராணுவத்தினர் தரப்பில் இந்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் புலிகள் தரப்பிலும் இழப்புகள் ஏற்பட்டிருக்கலாமென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஜ)

## அமெரிக்காவின் உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண அகதிகளுக்காக, அமெரிக்கா ஒருகோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

## விபரம் சேகரிப்பு

(மட்டுவில்)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு பல்வேறு இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வரும் அகதிகள் விபரங்களைத் திரட்டுவதில் இப் பகுதி கிராமசேவை அலுவலர்கள் துரிதமாக ஈடுபட்டு வருகிறார்கள். (82)

## விரைவு தபால் சேவை

(கொழும்பு)

கொழும்புசுற்றுப்புறப்பகுதியில் விரைவு தபால் சேவைத் திட்டமொன்று நாளை முதல் தபால் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இதற்குக் கட்டணமாக முப்பது ரூபா அறவிடப்படும்.

## பொறுப்பதிகாரி வேண்டுகோள்

(வவுனியா)

சனநடமாட்டமின்றி வெறிச்சோடி கிடக்கும் வவுனியா நகரத்திற்கு, இடம் பெயர்ந்து சென்ற மக்களை மீண்டும் வீடுகளுக்கு திரும்புமாறு வவனியா சிவில் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

## எரிபொருள் தட்டுப்பாடு

(வட்டுக்கோட்டை)

சங்கானைப் பகுதியில் எரிபொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மண்ணெண்ணைக்கு இங்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இங்குள்ள பொதுமக்கள் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெல், [redacted] பொம்மர் தாக்குதல்கள்

## திருமலையில் இதுதான் முதல் தடவை

### இடம் பெயர்ந்தவர் தரும் தகவல்

(யாழ்ப்பாணம்)

''ஷெல், பொம்மர், ஹெலி தாக்குதல் பற்றி பத்திரிகையில்தான். வாசித்தறிவோம். ஆனால் இப்பொழுதுதான் இந்த தாக்குதல்களை நேரடியாக அனுபவித்துள்ளோம்'' என்று திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்த குடும்பப் பெண் ஒருவர் தெரிவித்தார்.

கைதடி நலிவுற்றோர் நல்வாழ்வுநிலையத்தில் தங்கியுள்ள மூன்று பிள்ளைகளின் தாயான திருமதிசந்திரா இராஜநாயகம் (38 வயது) என்பவரே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது ''திருகோணமலை உள்துறைமுக வீதியில் வசிக்கும் எங்களுக்கு யாழ்ப்பாணம் பற்றி எதுவும் தெரியாது. எத்தனையோ பிரச்சனைகள் நடைபெற்ற போதிலும் இம்முறைதான் எமது இருப்பிடத்தை விட்டு இடம்பெயர்ந்துள்ளோம்.

13-ம் திகதி இரவு லவ்லேனிலுள்ள பொலிஸ் நிலையப் பக்கமிருந்து தொடர்ச்சியான துப்பாக்கிவேட்டுக்கள் உட்பட பலத்த சத்தங்கள் கேட்டன. இதனைத்தொடர்ந்து எனது வீட்டிற்கு அருகிலுள்ள அனைவரும் ஓடத்தொடங்கினார்கள்.

#### தந்தை மகன் ஷெல்லுக்கு பலி

எனது கணவர் துறைமுக அதிகாரசபையில் வேலைசெய்பவர் சம்பவம் நடந்த இரவு அவர் வேலைக்குப்போய் விட்டார். அவர் வருவார் வருவார்என்று பார்த்து அவரைக் காணமலே நிலாவெளிக்கு ஓடிவந்தோம். அங்கும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. எமது கண்ணிற்கு முன்னாலே ஒரு தந்தையும் மகனும் ஷெல் தாக்கிப்பலியானார்கள். இதனைத் தொடர்ந்து கும்புறுபிட்டிக்குச் சென்றோம். அங்கிடம் பெற்ற ஹெலித் தாக்குதலையடுத்து பாதுகாப்புத் தேடி திரியாய்க்கு கால்நடையாக பயணம் செய்தோம்.

#### தண்ணீர் உணவு இல்லை

காலை 7 மணிக்கு ஆரம்பித்த எமது பயணம் இரவு 7 மணிவரை தொடர்ந்தது. தண்ணீயோ உணவோ இன்றி திரியாயிலிருந்து புடவைக்கட்டுக்கு வந்து அங்கு சிறிது இளைப்பாறினோம்.

எம்மோடுவந்தவர்கள் தமது வீடுகளைப் பார்ப்பதற்குச்சென்றவர்கள்தான் பின்னர்திரும்பவேயில்லை. அவர்கள் இறந்துவிட்டதாகப் பின்னர் அறிந்தோம்.

#### 50 பேர் பலி

நிலாவெளியில் 'செல்வம் மில்லில்' இடம்பெற்ற பொம்பர் தாக்குதலில் காயமடைந்த பலரைப் பார்த்தோம். சுமார் 50 பேர்வரையில் இச்சம்பவத்தில் இறந்துள்ளார்கள். இதில் காயமடைந்தவர்களில் பலர் கைகள், கால்களில்லாமல் இருக்கிறார்கள்.

எனதுகணவர்துறைமுகஅதிகாரசபையில் தகவலாளராகப் பணியாற்றுகிறார். அவரை நினைத்துத்தான் பெரும் கவலைப்படுகிறோம். எங்கள் வீடுகள் எல்லாம் எரிக்கப்பட்டதாக இங்கு வரும் வழியில் அறிந்துள்ளேன். யாழ்ப்பாணம் எமக்குப் புதிய இடம். என்னசெய்வதென்று தெரியாமல் இருக்கிறேன். எல்லாவற்றிற்கும் ஆண்டவர் ஒரு வழி விடுவார்தானே என்று கவலை தோய்ந்த முகத்துடன் விடைபெற்றார்.

#### திருமலை மாணவி

நான் 'அட்வான்ஸ் லெவல்' படிக்கிறேன். சோதனைக்குப் படிப்பதற்காக திருமலை நகரிலுள்ள சின்னம்மா வீட்டிலிருந்தேன். எனது வீடு நிலாவெளியில் இருக்கிறது. இப்பொழுது தனித்துத்தான் இங்கு வந்துள்ளேன். அம்மாவைப் பற்றி எதுவித தகவலுமில்லை. நிலாவெளி செல்வம் மில் பொம்மர் தாக்குதலின்போது எனது தாயாரும் அங்கிருந்ததாக அறிகிறேன். ஆனால் அவருக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

#### நாவற்குழியில் நடந்தது

பத்து நாட்கள் பகலிரவாக பட்டினியோடு நடந்து களைத்து வந்த நாங்கள் நாவற்குழி வீட்டுத்திட்டத்திற்குச் சென்று அங்குள்ள வீட்டு வாசலிலிருந்தபோது அந்த வீட்டின் உரிமையாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் அங்கிருக்கவேண்டாம் என்று எம்மை கலைத்தார்கள். நாங்கள் ஓரிரவு தங்கிவிட்டுப்போகிறோம் என்று கெஞ்சினோம் அவர்கள் மறுத்துவிட்டார்கள். எமது நல்லகாலம் கைதடி இளைஞர்கள் வந்து எம்மை இங்கு அழைத்துவந்தார்கள்.

நான் தங்கியிருந்த சின்னம்மா வீடு முற்றாக எரிந்துவிட்டது. அங்கிருந்த எனது கல்விச்சான்றிதழ்கள், உடுப்புகள் எரிந்துள்ளன என்று எம். சாந்தி கூறினார். (து)

# புலிப்பல் சங்கிலி அணிந்த இளைஞர் மீது [redacted] கடற்படை தாக்குதல்

(புங்குடுதீவு)

குறிகாட்டுவான் நோக்கி வந்த படகை கடற்படையினர் மறித்து தீவிர சோதனைகளை நடாத்தியுள்ளார்கள்.

இந்த சோதனையின்போது படகில் பயணம் செய்த இளைஞர் ஒருவர் கழுத்தில் புலிப்பல்லு சங்கிலி அணிந்திருந்தபடியால் தீவிரமாக படையினரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவருடன் வயோதிபர் ஒருவரும் தாக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (101)

#### இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திலகரட்ண புதுடில்லிக்குக் கொண்டு செல்கின்றார்.

விசேட தூதுவராக செல்லும் இவர், இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப் பேசவுள்ளதுடன், வெளியுறவு அமைச்சர் திரு. குஜ்ராலையும் சந்திக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இச்சந்திப்பின் போது சிறிலங்கா அரசின் தற்போதைய நடவடிக்கை பற்றி எடுத்துக் கூறுவார் எனத் தெரிகிறது.

சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கை குறித்து இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங்க கவலை தெரிவித்திருந்தது தெரிந்ததே.

#### மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விசாரணை செய்யப்பட்ட பின் சிலர் விடுதலைசெய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

மட்டக்களப்பில் மின்சாரம் முற்றாக துண்டிக்கப்பட்டுவிட்டதாகவும், பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பலாலி, மயிலிட்டி அகதிகள்

(தென்மராட்சி)

பலாலி மயிலிட்டி இராணுவ தாக்குதலால் இடம் பெயர்ந்த மக்கள் மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை, மற்றும் சரசாலை பகுதிகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

சரசாலை இந்து இளைஞர் மன்றம், கிராமசேவையாளர்கள் இவர்களுக்கான உதவிகளைச் செய்துவருகின்றனர். (81)

#### பூனைவயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த இந்தச் சம்பவத்தில் பிரயாணிகள் பலர் பாதிக்கப்பட்டனர்.

இரு மணித்தியாலங்கள் பூனைவயில் இந்த பஸ் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டது.

தமிழ் பயணிகளைப் பார்த்து ஆத்திரமடைந்த அந்த இராணுவ சிப்பாய் வெளியில் நின்ற கற்களால் எறிந்தும் தனது ஆத்திரம் தீரவில்லை என்பதனால் பஸ்ஸினுள்ளே ஏறி பெரிய கற்களால் பயணிகளைத் தாக்கினாராம்.

இத்தாக்குதலினால் பெண்கள் குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை மூன்று பஸ்கள் இந்த முகாமில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதுடன் இரு பஸ்கள் வவுனியா செல்ல அனுமதிக்கப்படவில்லை. (து)

#### யாழ். மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த கிழமைமுதல் 2-ம் கட்ட உணவுவகைகளையும் வழங்குவதற்கு துரித நடவடிக்கைகளைமேற்கொண்டுவருகின்றோம். இவை தவிர மேலும் வெளியிடங்களிலிருந்து கூடுதலான அகதிகள் இங்கு வரக்கூடும் என நாம் எதிர்பார்ப்பதினால், புதிய அகதிகள் முகாம்களையும் திறப்பதற்கு முன் ஏற்பாடுகள் செய்துள்ளோம்'' எனவும் கூறினார். (வி)

#### யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

## அகதிகளுக்கு தொடர்ந்து உடைகள் சேகரிக்க முடிவு

### பீட வாரியாக உப குழுக்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் பொருட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து உடைகளைச் சேகரிப்பதோடு, பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து குறைந்த பட்ச பண உதவியாக ஐம்பது ரூபா சேகரிக்கப்பட வேண்டுமென்றும் மாணவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பீடவாரியாக 15 பேர் கொண்ட உபகுழு ஒன்றும் அமைக்கப்பட்டது. எனவே ஒவ்வொரு மாணவரும் தங்கள் பிரதேசத்திற்கு பொறுப்பாக நிதி சேகரிப்பிலீடுபடும் மாணவர்களிடம் தங்கள் நிதிஉதவியை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இரத்ததானம் செய்வதற்கும், முதலுதவி செய்வதற்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் பிற மாவட்டங்களுக்கு செல்வதற்கும் ஆயத்த நிலையிலுள்ள மாணவர்களின் பெயர் பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

#### பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் இலங்கைப் பிரதிநிதி திரு. பிலிப் கொன்ரசா அவசர விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான இடங்களை பார்வையிட்டதுடன் முக்கிய பிரமுகர்கள் சிலரையும் சந்தித்து உரையாடினார்.

## யாழ். நகரப் பகுதியில் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் பாடசாலை தளபாடங்கள்பல களவாடப்பட்டபோது பொதுமக்களால் தடுக்கப்பட்டது.

கொட்டடிப் பகுதியில் வீடொன்றில் குளிர்சாதனப் பெட்டியொன்றை களவாடப்பட்டுள்ளது.

யாழ். கச்சேரிப்பகுதியில் கடையொன்று உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியில் இரவு பல வீடுகளில் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது தற்போது தெரியவந்துள்ளது. (வி)

#### யுத்தகால

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அவசியத்தை எடுத்துக்கூறிப் பிரசாரம் செய்யலாம்.

அகதிகள் முகாம்களுக்குச் சென்று தொண்டர்களாக பணியாற்றலாம். அம்முகாம்களில் உள்ளவர்களுக்கு வீடு வீடாக சென்று உணவு பொருட்கள் உடைகள் பெற்று வழங்கலாம்.

இப்படியாக மாணவர் பல்வேறு வழிகளால் இந்த யுத்த காலத்தில் பொதுமக்களுக்கு தங்கள் பங்களிப்பை செய்ய முடியும். இந்தப்பங்களிப்பு அவர்கள் வாழ்நாளில் தமிழினத்திற்கு செய்யும் உன்னத சேவையாகும்,

#### அச்சுவேலி, ஆவரங்கால் அகதிகள்

## மட்டுவில் பகுதியில் தஞ்சம்

(மட்டுவில்)

மட்டுவில் பகுதிக்குத் தினம் தினம் அகதிகள் வந்தவண்ணம் இருக்கிறார்கள். ஆரம்பத்தில் வந்த அகதிகளை உபசரித்த சரசாலை இந்து இளைஞர் மன்றம் அவர்களுக்குஉணவளித்து, ஒவ்வோர் வீடுகளில் தங்க வைத்துள்ளது.

தொடர்ந்து டிராக்டர்கள் மூலமும், லொறிகள், வண்டிகள் மூலமும் இப்பகுதிக்கு வரத்தொடங்கிய அகதிகளின் தொகை அதிகரிக்கவே இப்பொழுது அகதிகளைப் பொது இடங்களில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இப்படி வரும் அகதிகளைப் பெருமளவு பொதுமக்களும் வரவேற்றுத் தமது வீடுகளில் தங்கவைத்துள்ளனர்.

பெரும்பாலும் அச்சுவேலி, ஆவரங்கால், பலாலி, [illegible] பகுதிகளிலிருந்தே அகதிகள் இங்கு வந்துள்ளனர். (82)

#### விமானங்கள் நோட்டம்:

## சாவகச்சேரியில் பதுங்கு குழிகள்

(மட்டுவில்)

மட்டுவில், கல்வயல், நுணாவில், சாவகச்சேரி, சரசாலைப் பகுதிகளில் பதுங்குகுழிகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இப்பகுதியில் இரண்டு ஹெலி, விமானங்கள் மேற்படி இடங்களுக்கு மேலால் பறந்து நோட்டம் விட்டுச் சென்றுள்ளதைத் தொடர்ந்தே பதுங்கு குழி வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (82)

#### மீண்டும்

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவே நான் விரும்புகிறேன்.''

அரசாங்கம் ஆயுதபலத்தில் தங்கியிருக்கவில்லை மக்களில்தான் தங்கியுள்ளது.

ஜே வி. பியினரின் நடவடிக்கையில் அழிந்துபோன பொருளாதாரத்தைச் சீரமைத்துவரும் இவ்வேளையில் வடக்கு கிழக்கில் நிலைமை மோசமடைந்துள்ளது.

மலையகம், தெற்குப்பகுதிகளில் நிலைமை மோசமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.'' (து)

#### ஏழு லொறிகளில் உணவுப் பொருட்கள்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு ஏழு லொறிகளில் உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/83.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org